மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகம் அதைப்பற்றி ஆராய்ந்து அறிந்து அரசாங்கத்திற்கு அறிவிக்குமானால் அது தொடர்பாக அரசாங்கம் தக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம். நெய்யூர் என்ற ஊரிலே நாடார் எடுக்கேஷனல் டிரஸ்ட் பெண்கள் கல்லூரி வைக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்திருந்தார்கள். தாசன் என்பவர் குழித்துறையில் ஓர் ஆண்கள் கல்லூரி வைக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்திருந்தார். அந்த இரண்டும் போன ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகத்தினால் பரிசிலிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இட வசதி இருக்கிறது என்று சென்ற ஆண்டு தெரிவித்தார்கள். இந்த ஆண்டு அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிப்பார்களானால், பல்கலைக் கழகக் கருத்தை அறிந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister whether with regard to backward areas where there are no colleges, the Government would relax the conditions and show consideration. ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, அரசாங்க கல்லூரிகளில் ஏழை எளிய மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளைப்போல தனியார் கல்லூரிகளிலே கொடுக்கப்படுவதில்லை. ஆகவே தனியார் கல்லூரிகளை ஏற்கும் செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட யோசனை இல்லை.

* 64 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the student-teacher ratio is being maintained in the Primary Educational Institutions run by the Government in Kanyakumari District ; and

(b) if not, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆசிரியர்-மாணவர் விகிதம் அரசினால் வருடாவருடம் ஒப்பளிக்கப்படும் ஆசிரியர் பதவிகளைப் பொறுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் நிர்வகிக்கப்படுகிறது.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, அங்கு ஆசிரியர் பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் வயது வரம்பை தாண்டிவிட்டார்கள். பலர் வயது வரம்பை தாண்டும் நிலையிலிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் கடந்த 23 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. அவர்களுடைய பீதியைப் போக்க வயது வரம்பிலிருந்து விலக்கு அளித்து அவர்களுக்கு வேலை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த நிலைமை உள்ளபடியே, பயிற்சி பெற்றிருந்தாலும் வயதைக் காரணம் காட்டி அவர்களுக்கு வேலை இல்லையென்று மறுக்கும் நோக்கம் இல்லை. வயது வரம்பு காரணமாக, வேலை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டால், அதை ஆராய வேண்டுமென்று கல்வித் துறையைக் கேட்டிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து கல்வித் துறை அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரோடு கல்விச் செயலாளர் அவர்கள் இதுபற்றி பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தை விரைவிலே முடிந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்கு மாணவர்-ஆசிரியர் விகிதத்தைக் குறைத்தால் வாய்ப்பு ஏற்படுமே, அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பை அதிகரிக்க முடியாது என்பதல்ல. நிதிவசதி இடம் தரவில்லை என்பதுதான் இப்போது இருக்கிற சங்கடம். வேலை வாய்ப்பை அதிகரிக்கக் கூடாது என்பதல்ல. அதற்கு வழிவகைகள் இருக்கின்றன. ஆண்டொன்றுக்கு பட்ஜெட்டிலே 3,000, 2,000 ஆசிரியர்கள் என்று ஒதுக்கிறார்கள். அதைப் பகிர்ந்தளிக்கின்ற சூழ்நிலை ஏற்படும்போதுதான் சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆண்டொன்றுக்கு 6,000 ஆசிரியர்களைத் தருகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் அப்பொழுது நிலைமை சரியாக இருக்கும். அதையெல்லாம் பொறுத்துத்தான் இப்பொழுது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. எந்த அளவுக்கு அதிகமாக ஆக்கமுடியும் என்பதைப்பற்றித்தான் அரசு ஆலோசித்துக் கொண்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ரீஎம்ப்ளாய்மெண்ட், எக்ஸ்டன்ஷன் போன்றவற்றைத் தவிர்ப்பதற்கு கல்வி இலாகாவிற்கு அரசாங்கம் தகுந்த தாக்கீது நல்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1973 பிப்ரவரி 8]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும் பாலும் இப்பொழுது எக்ஸ்டென்ஷன் தருவதில்லை, ரீஎம்ப்ளாய்மெண்ட்டும் தருவதில்லை. அரசினர் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு ஓய்வுபெறும் வயது 58 ஆக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அரசினர் பள்ளிகளிலே பணி யாற்றியவர்கள், அதற்குப் பிறகு தனியார் பள்ளிகளிலே 60 வயது வரையிலோ அதற்கு மேலோ பணியாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே தனியார் பள்ளிகளிலும் 58 வயதாக நிர்ணயிக்கக் கூடிய ஏற்பாட்டை அரசாங்கம் பரிசிலித்து வருகிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் நிலைமை ஓரளவுக்கு சௌகரியமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாயூரம் பெண்கள் கல்லூரி

* 65 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் பெண்கள் கல்லூரியில் பட்டப்படிப்புக்கான வகுப்புக் கள் எப்போது துவக்கப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாயூரம் அரசினர் மகளிர் கல்லூரியில் சரித்திரப் பாடத்தில் பி.ஏ. பட்ட வகுப்பு 1971-72-ம் ஆண்டே துவக்கப் பட்டுள்ளது. இட வசதியின்மை காரணமாக மற்ற பட்ட வகுப்புகள் துவக்க இயலவில்லை.

நெல்லை மாவட்டத்தில் கனிவளங்கள்

71 வினா—திரு. தி. சி. அ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் என்னென்ன கனிவளங்கள் கிடைக்கின்றன என்று ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவர அறிக்கை ஒன்று@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மலையில் கிடைக்கும் கனிப்பொருள்கள்

* 72 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலைகளில் கிடைக்கும் முக்கிய கனிப்பொருட்கள் தற்போது எவை எவை ?

@ 602 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.